நானே ஆண்டவர் : ஏற்ற காலத்தில் இதை நான் விரைவாய்ச் செய்து முடிப்பேன் . ஏசாயா 60:22

வேலை விண்ணப்ப தொடர்பாக சாட்சியம் ஒன்றினை நான் பகிர்ந்து கொள்கிறேன் - இது முற்றிலும் ஓர் அற்புதமே!

என் பெயர் சலோமி.தனியார் நிறுவனமொன்றில் முன்னணி அலுவலராக பணியாற்றி வந்தேன்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக (2015 – 2020) பல்வேறு அரசு வேலைகளுக்கு விண்ணப்பித்தேன் ஆனால் பதில் ஒன்றும் கிடைக்கவில்லை.இது என் நம்பிக்கைக்கு சவாலாக இருந்தது.என்ன செய்வது என அறியாமல் தொடர்ந்து ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்து அரசு வேலைக்காக காத்திருந்தேன்.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 28ம் திகதி என்னுடைய குடும்பத்தினரோடு (7 பேர்)கெடா சுங்கை பத்துவில் உள்ள அமலோற்பவ அன்னை சிற்றாலயத்திற்கு சென்றிருந்தேன்.

அங்கு என் மன்றாட்டினை குடும்பத்தார் மன்றாட்டுக்களோடு சேர்த்து மாதாவின் பாதம் வைத்தேன்.வீடு திரும்பும் போது புது எண்ணங்களோடு ஆண்டவரில் நம்பிக்கையோடு வந்தோம்.

பல மாதங்கள் கடந்தன, அரசு பொது மருத்துவமனையிலிருந்து நேர்முக சந்திப்பிற்கு காத்திருந்தேன்.தொடர்ந்து என்னில் நம்பிக்கை உறுதியாக வளர இறை வார்த்தையை தவறாது வாசித்து வந்தேன்.

இறுதியாக,இந்த ஆண்டு(2021) ஜனவரி 5ம் திகதி,மலாயா பல்கலைக்கழக மருத்துவ மையத்திலிருந்து காணொளி அழைப்பின் வாயிலாக ஜனவரி 18ம் திகதி நேர்முக தேர்வுக்கு அழைப்பு வந்தது.இதில் நான் தேர்ச்சி பெற்றேன்.பிப்ரவரி 9ம் திகதி பணி அமர்வு கடிதம் கிடைக்கப்பெற்றேன்.

ஆனந்த கண்ணீரோடு அன்னை மரியாளின் வல்லமையான பரிந்துரைக்கு நன்றி செலுத்தினேன்.ஆண்டவர் ஆசியில் எனக்கு மருத்துவ மருந்தக தொழில்நுட்ப அலுவலராக (U 29) வேலை கிடைத்தது.

இன்று நான் சந்தோஷமாக உள்ளேன்.இப்பணியின் வாயிலாக பிறருக்கு சேவை செய்யவும் ஆண்டவரை மகிமைப்படுத்தவும் எனக்கு வாய்ப்பு உள்ளது.

ஆண்டவருக்கும் அன்னை மரியாளுக்கும் ஆயிரம் நன்றிகளை சமர்ப்பிக்கின்றேன்.

இறை ஆசீர் உரித்தாகுக !

சலோமி அன்னமுத்துவின்  சாட்சியம்

செந்துல் புனித சூசையப்பர்  தேவாலயம்